

**சு.சீனிவாசன்,**
**முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**தமிழியல் துறை,**
**பாரதிதாசன்பல்கலைக்கழகம்,**
**திருச்சிராப்பள்ளி – 24.**
**அலைபேசி: 9788031138**
**Email: tamilvasan86@gmail.com**

## மக்களாற்றுப்படையின் அமைப்பு

ஆற்றுப்படை இலக்கியம் வளர்வதற்கு காரணம் அக்காலச் சூழலே காரணமாகும். ஏனெனில் சங்க காலம் மன்னரின் ஆட்சிகாலம் என்பதால் அவை சமூக உணர்வு நோக்கோடு செயல்பட்டது. மன்னனுக்காக சமுதாயமும் வாழ்ந்த காலம் சங்ககாலம். மன்னர்கள் வீரம் கொடை என்ற இரண்டையும் உயிராக மதித்து வாழ்ந்துள்ளார்கள். ஆகையால் கலைஞர்கள் மன்னரிடம் செல்லும்போது அக்கலைஞர்களை மன்னாகள் ஆதரித்துப் போற்றியுள்ளனர். இருவரிடையே இணக்கமான நட்பு ஏற்பட்டு ஒருவரையொருவர் போற்றி வாழ்ந்தமையால் ஆற்றுப்படை இலக்கியம் தோன்றலாயிற்று.

சங்ககால ஆற்றுப்படைக்கு பின்னர் எழுந்தது பிற்கால ஆற்றுப்படை. கால மாற்றத்திற்கேற்ப அறிவியலின் பரிமாண வளர்ச்சி போன்று, இலக்கியத்திலும் காலத்திற்கேற்றவாறு பாடுபொருளில், மாற்றத்தினையும் வளர்ச்சியினையும் பார்க்க முடிகிறது. இவ்வகையில் வளர்ந்தது தான் பிற்கால ஆற்றுப்படை.

சங்க ஆற்றுப்படை இலக்கியங்களான பொருநராற்றுப்படை, பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, திருமுருகாற்றுப்படை போன்றவற்றின் அமைப்பியல் போன்று பிற்கால ஆற்றுப்படையான மக்களாற்றுப்படையின் அமைப்பியலைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இவ்வாற்றுப்படை கலைஞர் கருணாநிதியைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 3387 அடிகளில் 1997 ஆம் ஆண்டு இயற்றப்பட்டுள்ளது. இவ்வாற்றுப்படை வறுமை நிலையில் வாழும் மக்களை கலைஞரிடத்து ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் மணிமுடிச்சோழன். இவரின் இயற்பெயர் மணியன். திருவாரூரை மாவட்டமாகவும் குடவாசலை வட்டமாகவும் கொண்ட கீழாச்சமங்கலத்தில் செல்லப்பா தருமலிங்கத்திற்கு நான்காம் மகனாக 1940-ல் பிறந்தார். இவர் புலவர்பட்டயம், எம்,ஏ., தமிழ், எம்.பில்., எம்.ஏ., அரசியல் எம்.எட், ஆகிய பட்டங்களைப் பெற்று தமிழாசிரியராகப் பணியாற்றியவர்.

சிறந்த விளையாட்டு வீரர். வானொலியில் கவிதை நாடகங்களும், முரசொலி, நம் நாடு, தினத்தந்தி, தினமணி, மாலைமுரசு போன்ற நாளேடுகளிலும், காஞ்சி, சுரதா, முல்லைச்சுரம் போன்ற இதழ்களிலும் கவிதை, கட்டுரை எழுதியுள்ளார். சண்பகம் இதழின் பொறுப்பாசிரியராகப் பணியாற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூலினை ஆசிரியர் கவிதை நயத்துடனும், உணர்ச்சிபெருக்குடனும், சொல்லாட்சித் திறனுடனும் படைத்துள்ளார். இந்நூலினைப்பற்றி பாலசுந்தரம் அணிந்துரையில் “இந்நூலுள் செய்யுளின் கட்டுக்கோப்பும், கவிதைநயமும் பரவலாக அமைந்துள்ளன. கலைஞரின் செயற்கரிய சாதனைகளையும், பண்பாட்டுச் சிறப்புகளையும் விளக்குதலே முதன்மையான குறிக்கோளாதலின் காப்பிய வருணனைகள் அடுத்தபடியாகவே அமைந்துள்ளன. எனினும் காவியச்சுவை விரும்புவார்க்குக் குறைவைக்காமல் தொடைநயங்களும் அணி நலன்களும் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாகக் கலைஞரின் நூல்பயிலியல்பை

**“முத்தமிழ் வடிவம் முத்திரைப் பசும்பொன்**

**புத்தகமெல்லாம் புத்தகம் கண்டவர்”**

என்றாற் போலவரும் அடிகளால் உணரலாம்”[1] என்று கூறுகிறார்.

இந்நூலில் சமஸ்கிருதம், இந்தி மற்றும் வைதீகப்பார்ப்பனர் பற்றிச் சில இடங்களில் கடுமையாக சாடியுள்ளார் என்பதை பாலசுந்தரம் “இந்நூலுள் வடமொழியாகிய சமஸ்கிருதம் பற்றியும், இந்திமொழி பற்றியும், வைதீகப் பார்ப்பனர் பற்றியும் வருமிடங்களில் ஓரிரு கடுமையான சொற்களைப் பயன்படுத்துளைமையைத் தவிர்த்திருக்கலாம். உணர்ச்சி வசப்படும் கவிஞர்களுக்கு அத்தகைய சொல்லாட்சிகளைத் தவிர்க்க முடியாது என்பதைப் பொதுவாகத் தாம் எடுத்துக்கொண்ட நூலின் குறிக்கோளைச் செம்மையாகவே புலப்படுத்தியுள்ளார்”[2] என்று கூறுகிறார்.

இந்நூலினைப் பற்றி தட்சணாமூர்த்தி “பழைய ஆற்றுப்படைகளை ஐந்திணை வாழ்வு ஆக்கிரமித்தது. இவர் நூலைக் கலைஞரின் வரலாறும் சாதனைகளும் ஆக்கிரமிக்கின்றன. ஆம்! மக்கள் உள்ளங்களை ஆக்கிரமித்த தலைவர் நூல் முழுவதையும் தனக்கே உரிமையாய்க் கொள்கின்றார்.

கலைஞர் கருணாநிதியின் பெருமை பேச எழுந்ததே இந்நூல். எனவே பண்டைய ஆற்றுப்படையின் அமைப்பினை ஆங்காங்கே தொட்டுக்காட்டுவதோடு அமைந்தார். பழைய ஆற்றுப்படைகளின் தலைவர் பெருமைக்கு ஓரளவே இடமுண்டு. ஆனால் இந்நூலோ முழுக்க முழுக்கப் பாட்டுடைத் தலைவனின் தனித்தன்மை. ஆசிரியரின் பாவண்மை சலிப்பினை ஒட்டிச் சாதனை படைக்கின்றது”[3] என்கிறார்.

## கருத்தலகுகள்

இம்மக்களாற்றுப்படையில் கருத்தலகுகளாக பத்து(10) பகுதிகள் அமைகின்றன. அவை பின்வருமாறு.

1. ஆற்றுப்படுத்துதல்
2. பாட்டுடைத் தலைவனின் தோற்றம்
3. பாட்டுடைத் தலைவனை அணுக வேண்டிய முறை
4. மக்களின் வறுமை நிலை

5. பாட்டுடைத் தலைவனை மக்கள் காணச் செல்லும் வழியில் அவனது சிறப்புகளும், திட்டங்களும்
6. பாட்டுடைத் தலைவனின் மாளிகையை மக்கள் காணுதல்
7. மக்கள் நாளவைக் களம் கண்டு புகுதல்
8. நாளவைக்களத்தில் பாட்டுடைத்தலைவனை மக்கள் வாழ்த்துதல்
9. பாட்டுடைத்தலைவனை மக்களின் தேவைகளை அளித்தல்
10. பாட்டுடைத்தலைவன் யார் (கலைஞர்) எனல்

மேலே கூறப்பட்ட அனைத்து தன்மைகளும் சங்க ஆற்றுப்படைநூல்களில் காணப்படுகிறன.

இந்நூல் **‘உலகம்’** என்னும் மங்கலச் சொல்லோடு தொடங்குகிறது. முதலில் கலைஞரின் சிறப்புகள் கூறி வறுமையுற்ற மக்களைக் கலைஞரிடத்து ஆற்றுப்படுத்துவதாக அமைகின்றது. மக்கள் வறுமையினால் அடைந்த தாழ்ந்த நிலை, இந்நிலையை நீக்கிட பெரியாருடன் சேர்ந்து தொண்டாற்றி அண்ணாவின் மனதில் இடம் பிடித்து அவருடனும் தொண்டாற்றி வளர்ந்தவர் கலைஞர். அண்ணாவின் மறைவிற்குப் பின் ஆட்சியின் அரியணையில் ஏறினார் கலைஞர். அவர் அரியணை ஏறிய நாள் முதல் இன்று வரை மக்களுக்குப் பலத் திட்டங்களைக் கொண்டு வந்து ஆற்றிய பணிகள் அனைத்தையும் விளக்குகின்றது.

இந்நூலில் ஆசிரியர் சங்க ஆற்றுப்படையின் அமைப்பை ஆங்காங்கே தொட்டு காட்டுவதுபோல் அமைத்துள்ளார். சான்றாக சங்க ஆற்றுப்படை இலக்கியங்களில் ஒரு கலைஞன் எதிர்ப்பட்ட கலைஞனுக்கு வழிக்கூறும்போது ‘செல்வீராயின்’ ‘காண்பீர்’ ‘கேளிர்’ என்ற சொல்லினைப் பயன்படுத்துவர். இந்நூலில் அவ்வமைப்பினை போன்றே ‘காண்பீர்’, ‘கேளிர்’, ‘வாழ்த்துவீர்’, என்ற இச்சொல்லினைக் கையாண்டுள்ளார். இவற்றில் ‘காண்பீர்’, என்ற சொல்லை அதிகமாக நூல் முழுவதும் இழைந்தோடச் செய்திருக்கிறார். ‘மேலும்’ என்ற சொல்லையும் அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார்.

சங்க ஆற்றுப்படை இலக்கியங்களில் தம்மையொத்த எதிர்ப்பட்ட கலைஞர்களுக்கு இவ்வள்ளலிடம் செல்க என்று ஆற்றுப்படுத்தும்போது மன்னனது நாட்டிற்குச் செல்லும் வழியைக் கூறுவான். இவ்வாற்றுப்படையில் அவ்வமைப்பு இல்லை. காரணம் கால மாற்றத்தின் சூழலேயாகும். இந்நூலின் பாட்டுடைத்தலைவன் இருக்கும் நகரினை நாடே அறியும். இன்று மக்களாட்சியாதலால் மன்னர் எவருமில்லை. நாகரீக மாற்றத்தால் பெரும்பாலும் சாலையமைப்புகள், இரயில் வண்டிகள், பேருந்துகள் அதிகம் காணப்படும் நிலையில் ஐந்நில வருணனைகள் மற்றும் வழிகள் கூறப்படும் நிலை இல்லை எனலாம்.

கலைஞர் மாளிகை அண்ணா சாலையில் அமைந்துள்ளது. அம்மாளிகை முன் இளைஞர், முதியோர், கருப்பு சிவப்பு கொடிகளோடு சூழ்ந்திருந்திருப்பர். இளைஞர் கூட்டம் மக்களை வரவேற்று அன்பைப்பொழிந்து நலிவைப் போக்குவார். அவரிடம் பிரியாவிடைபெற்று கலைஞரின் மாளிகையைக் காண்பீர் என்று ஆற்றுப்டுத்துவதாக இந்நூலில் அமைந்துள்ளது.

இவ்வமைப்பு சங்க ஆற்றுப்படையிலும் காணப்படுகிறது. மன்னனது அரண்மனைவாயில், அங்கு வீற்றிருக்கும் வாயிலோன் கலைஞனை வரவேற்று பேசுவது போன்ற கருத்து மேற்கூறிய கருத்தை ஒட்டி அமைகிறது.

சங்க ஆற்றுப்படை நூல்களில் மன்னனது அவையில் புலவர்கள், சான்றோர்கள், கலைஞர்கள் மன்னனைச் சுற்றி சூழ்ந்திருப்பர். அவ்வமைப்பு போன்றே இந்நூலில் கலைஞர் கருணாநிதியின் மாளிகையில் அவரைச் சுற்றிப் பேராசிரியர் அன்பழகன், முரசொலிமாறன், பொன்முடியார், கிட்டு மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் சூழ்ந்திருப்பர். இவ்வமைப்பு சங்க ஆற்றுப்படையோடு ஒத்துப்போகும் நிலையினைக் காணமுடிகிறது.

சங்க ஆற்றுப்படையில் மன்னன் கலைஞர்களுக்கு என்னென்ன தர வேண்டும் என்பதை மனக்குறிப்பால் உணர்ந்து அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, பரிசில் போன்றவற்றைக் கொடுத்தான். ஆனால் இவ்வாற்றுப்படை அவ்வமைப்பிலிருந்து சற்று வேறுபடுகிறது. தன்னைச் சூழ்ந்திருக்கும் கழக உடன்பிறப்புகளிடம் கலைஞர் கருணாநிதி மக்களின் குறைகளைக் கேட்டறிவார். பின் அவற்றை களையும் முறையினையும் கூறி மக்களுக்கு சிறுகுறையும் வராதபடி தம் உள்ளக் கருத்துக்களையும் தருவார். மக்கள் அவரிடத்தில் வாழ்த்தி வணங்கி நின்றால் இளகும் நெஞ்சம்கொண்டத் தாயினைப் போன்றே அன்பைப் பொழிவார். மக்களது தேவை உணர்ந்து யாவையும் அளிப்பார் என்பதாக அமைகிறது. பரிசில்கள் என்னென்ன என்பது பற்றிக் குறிப்பிடவில்லை.

முன்னமே மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை நினைத்துப் பல நலத்திட்டங்களான பேருந்து அரசுடைமை, கள்ளுக்கடை ஒழிப்பு, வறுமையயை ஒழித்தல், மாடிவீடாக மாற்றிய திட்டம், உச்சவரம்பு, தரிசு நிலங்களைத் தருதல், குருவிக்காரருக்கு வீடு, இருளை விரட்ட மின் கம்பம், உழவர் போற்றும் உத்தமர், இரும்புத் தொழிலில் ஏற்றங்கண்டவர், சீரணி கண்ட செம்மல், பிச்சைக்காரர் மறுவாழ்வு, ஆலயத்திருப்பணிகள், பொன்னியின் செல்வன், உழைக்கும் மக்களுக்குத் திட்டம், கல்விக் காவலர், குறள் மனம் பரப்புதல், தியாகிகள் போற்றும் தியாகி, ஊனமுற்றவர் உயரத் திட்டம், நன்னீர் வழங்கும் திட்டம், கைத்தறியாளர் கண்ணீர் துடைத்தல், தொழிற்கல்வி தந்த தூயோன், தொழில் தொடங்கத் துணை, ஏழையார்க்கு இனிய திட்டம், கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், மழலையர் காப்பகம், வேலைவாய்ப்பு முன்னுரிமை, சித்த மருத்துவம், கைத்தொழில்வாரியம், கூவச்சீரமைப்பு, காவல்துறையின் கண்ணீர் துடைத்தது, முதியோர் உதவித் தொகை, தொழிலில் பங்கு, மாநில சுய ஆட்சி, கங்கை காவிரி இணைப்பு, பூம்புகார் திருத்தப்பணி, வள்ளுவர் கோட்டம் வழங்கிய வள்ளல், கலப்புத்திருமணம் காண்பார் வாழத் திட்டம், 'பொதி' வண்டிகளை ஒழித்தது, பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி, நீலப்புரட்சி, உரத்தொழில் வளர்ச்சி, கண்ணொளிதந்தது, தொழுநோய் மறுவாழ்வு, இலங்கை மக்களின் மறுவாழ்வு, இருநிலை அகற்றிய ஏந்தல், ஊதிய உயர்வை உடனே தந்தவர், ஏழைப்பெண்களின் திருமண உதவி, பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை, பெண்களுக்கு வேலை வாய்ப்பு, மொழிப்போர் தியாகிகளுக்கு உதவி, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மகளிர் தொழில்வள மையம் போன்றவற்றைக்கொண்டு வந்து செயல்படுத்தியது பரிசில்கள் எனக் கருதலாம்.

சங்க ஆற்றுப்படையில் நூலின் முதலிலேயே ஆற்றுப்படுத்தும்போது 'மன்னரிடத்தில் (கரிகாலனிடத்து) சென்றால்' என்ற குறிப்பு இடம் பெறுகிறது. நூலின் இறுதியாக பரிசில்கள் தருபவன் யார் எனில் இந்நாட்டுக்குரிய தலைவன் என்பதாக அமையும்.

இவ்வாற்றுப்படையில் ஆசிரியரே கலைஞரிடத்து மக்களை ஆற்றுப்படுத்துவதால் நூலின் தொடக்கத்தில் மக்களை ஆற்றுப்படுத்தி, இன்னின்னவர், இன்னின்ன பயனைப் பெற்று இன்னின்ன முறையில் வாழ்த்துவா் என்றும், கலைஞா் உங்களை அன்புடன் வரவேற்று வேண்டியதைத் தருவாா் என்றும் கூறி அவரிடத்தில் செல்லுங்கள் என்று ஆற்றுப்படுத்துகிறாா்.

சங்க ஆற்றுப்படையில் கலைஞன் பாட்டுடைத்தலைவனின் அரண்மனையைக் காணுதல் என்னும் அமைப்பு போன்று இந்நூலில் கலைஞரின் மாளிகையைக் மக்கள் காணும் நிலை காணப்படுகிறது. சங்க ஆற்றுப்படையில் கலைஞன் மன்னனது அவைக்களம் புகுந்து மன்னனைக் கண்டு வாழ்த்துவர். அவ்வமைப்பு போன்றே வறுமையில் வாடும் மக்கள் பலர் கலைஞர் கருணாநிதி அவையில் காணச் செல்லும் நிலை இந்நூலில் அமைந்துள்ளது.

சங்க ஆற்றுப்படை நூல்களில் ஒரு கலைஞன் எதிர்பட்ட கலைஞனிடத்து நீ மன்னனை அவைகளத்தில் கண்டு அவனை புகழ்ந்து பாடும் முன்னே இன்முகத்தோடு நோக்கி இன்னின்ன பரிசில்கள் தருவான் என்று கூறப்பட்டுள்ளது. சங்க ஆற்றுப்படை போன்றே இவ்வாற்றுப்படையில் ஆசிரியர் மக்களை நோக்கி நீங்கள் நாளவைக்களத்தில் புகுந்து கலைஞரை பலவாறு புகழ்ந்து பாடினால் உங்களிடத்தில் இன்முகத்தோடு தாயினைப் போன்று அன்பைப் பொழிந்து உங்கள் தேவைகள் என்ன என்பதை உணர்ந்து யாவையும் அளிப்பார். அனைவரும் மகிழ மக்களுக்காக மக்களில் ஒருவர். திசைகளெல்லாம் புகழும் தலைவர் கலைஞரை நாடிச் செல்லுங்கள் என்று சங்க ஆற்றுப்படை அமைப்போடு பொருந்தும் நிலையினைக் காண முடிகிறது.

இந்நூல்களில் மக்கள் பற்றிய வருணனைகள் அதிமாக காணப்படுகின்றன. தொழிலாளர், பெண்கள், எனப் பல வகையினரின் துன்பத்தை அழகாக சித்தரித்து ஏழைபடும் பாடு, விவசாயகளின் நிலை, திருமணமாகதப் பெண்களின் நிலை என அவா்களின் வாழ்க்கை நிலையை இந்நூலில் படம்பிடித்துக் காட்டியுள்ளார் மணிமுடிச்சோழன்.

கலைஞா் கருணாநிதியின் பிறப்பு முதல் பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைக்குள் மூழ்கி அவருடன் சோ்ந்து தொண்டாற்றி, அறிஞா் அண்ணாவின் கொள்கையில் ஈடுபட்டுப் பின் ஆட்சியின் அறியணையில் அமா்ந்து மக்களுக்குப் பலவகை நல்திட்டங்களைத் தந்து மக்களை அன்புடன் வரவேற்று வேண்டியனவற்றைத் தரும் வரையில் அவரின் சிறப்புகள், பண்புகள், சாதனைகள் போன்றவை நூல் முழுவதும் கூறப்படுவதாக அமைந்துள்ளன.

சங்க ஆற்றுப்படை இலக்கியங்களின் சாயல் ஆங்காங்கே இவ்வாற்றுப்படையில் காணப்படுகின்றது. இருப்பினும் காலச்சூழலுக்கேற்ப மன்னராட்சி முடிந்து மக்களாட்சி எனும் நிலையில் மக்களைக் கலைஞா் கருணாநிதியிடத்து ஆற்றுப்படுத்தும்போது ஆசிரியா் கையாண்ட போக்கின் அமைப்பு நன்முறையில் அமைந்துள்ளது எனலாம்.

## அடிக்குறிப்புகள்

1. மணிமுடிச்சோழன், மக்களாற்றுப்படை, பாலசுந்தரம் அணிந்துரையுடன், ப.XV
2. மணிமுடிச்சோழன், மக்களாற்றுப்படை, பாலசுந்தரம் அணிந்துரையுடன், ப.XVI
3. மணிமுடிச்சோழன், மக்களாற்றுப்படை, தட்சணாமூர்த்தி – மக்களாற்றுப்படை ஒரு கண்ணோட்டத்துடன், ப. XVI